# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, யூலை மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ. 34/2007*

## வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற் குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் :-

"(1) அதிகாரசபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) குடியியல் பொறியியல், பெருவழிப் பொறியி யல், வர்த்தகம், நிதி, சட்டம் அல்லது நிர்வாகம் ஆகிய துறைகளில் பரந்த அனுப வமுடையவர்களும் ஆற்றலை வெளிப்படுத் தியுள்ளவர்களுமான ஆட்களிடையேயி ருந்து அமைச்சரால் நியமிக்கப்படவேண் டியவர்களான ஏழு உறுப்பினர்கள் (இதன கத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பி னர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ; அத்துடன்

(ஆ) (i) பெருவழிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவராக ;

(ii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவராக ;

(iii) மின்வலு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவராக ;

(iv) போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவராக ;

(v) காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவராக ;

(vi) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 1974ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சேவைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சேவைகள் சபையின் பொது முகாமையாளராக ;

(vii) நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க,

*நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப் பாளர் தலைமையதிபதியாக ;*

(viii) *சூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலராக ; அத்துடன்*

(ix) *சுரங்கங்கள் கனிப்பொருட்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவீட்டு, சுரங்கங்கள் பணியகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக,*

*இருக்கவேண்டியவர்களான வேறு ஒன்பது உறுப்பினர்கள் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "பதவிவழி உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).".*

*(2) அப்பிரிவின்* (11) *ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :*

*"(ஆ) அவர் பதவிவழி உறுப்பினரொருவராக இருப்பின் அவ்வுறுப்பினரைப் பெயர்குறித்து நியமனம் செய்த அமைச்சர் அவ்வுறுப்பினரின் இடத்திற் பதிற்கடமையாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம். ".*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"(1) (அ) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட வீதி அபிவிருத்தி மதியுரைப் பேரவையொன்று தாபிக்கப்படலாம் ; (இது இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்):

(i) பெருவீதிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள் ; இவர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும் ;

(ii) சூழல் மற்றும் இயற்கை வளங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(iii) தொலைத்தொடர்புகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(iv) உள்ளூராட்சி மன்றம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(v) அரச காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(vi) போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(vii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக் கப்பட்ட அத்தகைய அமைச்சரது அமைச் சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(viii) அப்போதைக்கு அதிகாரசபையின் பணிப் பாளர் தலைமையதிபதிப் பதவியை வகிக்கும் ஆள் ; இவர் பேரவையின் செயலாளராதல் வேண்டும் ;

(ix) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(x) 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரசபை யின் பொது முகாமையாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(xi) 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சேவைகள் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சேவைகள் சபையின் பொது முகாமை யாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(xii) பெருவழிப் பொறியியல், முகாமைத்துவம் அல்லது நிர்வாகம், சட்டம் அல்லது நிதி என்னும் விடயங்களில் பரந்த அனுபவமுடையவர்களாகத் தோன்றுபவர்களும் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளவர்களுமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட வேறு நான்கு ஆட்கள்;

(ஆ) இப்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் "பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

(2) பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) வீதிக் கொள்கை, வீதி ஆராய்ச்சி, வீதித் திட்டமிடல் மற்றும் செயல்நுணுக்கம் அத்துடன் வீதி அபிவிருத்தி என்பன பற்றி அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் ; அத்துடன்

(ஆ) விடயத்திற்கேற்ப அமைச்சரால் அல்லது அதிகாரசபையால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படக் கூடியவாறான அதிகாரசபையின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் தொடர்பிலான ஏதேனும் விடயம் பற்றி விடயத்திற்கேற்ப அமைச்சருக்கு அல்லது அதிகாரசபைக்கு மதியுரை வழங்குதல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது :

"அதிகார சபையின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள்.

9. (1) அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள், அத்துடன் பணிகள் என்பன (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் அபிவிருத்தி இடப்பரப்பிற்குள் பின்வருவனவாதல் வேண்டும் :

(அ) அமைச்சரால் அதிகாரசபைக்கு காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கமைய அத்தகைய இடப்பரப்புகளுக்குள் ஒருங்கிணைந்த வீதித் திட்டமிடலையும் வீதிகளின் அபிவிருத்திகளையும் மேற்கொள்ளுதல் ;

(ஆ) அமைச்சரால் அதிகாரசபைக்கு காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கமைய அத்தகைய இடப்பரப்புகளுக்குள் ஒருங்கிணைந்த வீதித் திட்டமிடலுடன் முரண்பாடற்ற அத்தகைய துறைகளில் வீதி அபிவிருத்தி வேலை, செயற்பாடுகள் அத்துடன் சேவைகள் தொடர்பான சார்புடைய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்;

(இ) மூலதன முதலீட்டுத் திட்டங்கள் உட்பட வீதி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துத் தொகுத்தலும் அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கென அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும்;

(ஈ) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு வீதிப் பேணல் மற்றும் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிறைவேற்றுகையைப் பொறுப்பேற்றல் ;

(உ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு ஏதேனும் வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தை அல்லது செயற் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான எல்லா ஒப்பந்தங்

களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது பகிரங்க தனிப்பட்ட பங்காண்மை அல்லது கூட்டுத்தொழில் முயற்சி என்ற வகையிலாயினுஞ்சரி அல்லது இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியிலுள்ள எவரேனும் ஆளுடனாயினுஞ்சரி செய்து கொள்ளுதலும் நிறைவேற்றுதலும் மேற் கொள்ளுதலும் ;

(ஊ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டதை அல்லது செயற்திட்டத்தை எவரேனும் ஆள் பூர்த்தி செய்யத்தவறியதால் தவணை தவறுகையிலுள்ள அத்தகைய கருத்திட்டத்தை அல்லது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதனைப் பொறுப்பேற்றல் ;

(எ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களையும் மூலதன முதலீட்டுத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துதல் ;

(ஏ) அத்தகைய அபிவிருத்தி இடப்பரப்புகளில் மூலதன வீதி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துத் தொகுத்தல் ;

(ஐ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் அல்லது கொள்வனவு செய்தலும் அத்துடன் வைத்திருத்தலும் அல்லது அதனால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கையுதிர்த்தலும் அல்லது குத்தகைக்குக் கொடுத்தலும் ;

(ஒ) ஏதேனும் அரசாங்க முகவராண்மையின் வேண்டுகோளின்பேரில் அத்தகைய முகவராண்மையின் சார்பில் வீதி

அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் திட்டமிடல் செயற்திட்டங்களையும் தயாரித்தலும் அத்தகைய கருத்திட்டங்களின் அல்லது செயற்திட்டங்களின் நிறைவேற்றுகையுடன் இசைவாக்கம் செய்தல் அல்லது துணை புரிதல் ;

(ஓ) அரசாங்க முகவராண்மைகளின் அல்லது ஏதேனும் அபிவிருத்தி இடப்பரப்புகளினுள் வேறு அரசாங்க முகவராண்மைகளின் நலனுக்காக வீதித் திட்டமிடல் சேவைகளை வழங்குதல் ;

(ஔ) அதிகாரசபையால் வழங்கப்படும் எவையேனும் சேவைகளுக்குக் கட்டணங்கள் அறவிடுதல் ;

(க) காசாகவாகயினுஞ்சரி வேறு வகையிலாயினுஞ்சரி கொடைகளை, மானியங்களை, நன்கொடைகளை அல்லது பங்கீடுகளை ஏற்றுக்கொள்ளுதலும் அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவற்றைப் பிரயோகித்தலும் ;

(ங) திட்டமிடல், வடிகாலமைப்பு, நிர்மாணம், பேணல் அத்துடன் தொழிற்பாட்டு அம்சங்களை உள்ளடக்கும் வீதித் துறைகளுக்கு ஒழுங்குபடுத்தும் வரைவுருவொன்றை வகுத்துத்தொகுப்பதற்கென ஒழுங்குபடுத்தும் குழுமமொன்றைத் தாபித்தல் ;

(ச) வீதி ஒதுக்கமொன்றை, பகிரங்க வீதி ஒதுக்கமொன்றை அல்லது தேசிய பெருவழி ஒதுக்கமொன்றைப் பயன்படுத்துவதற்காக ஏதேனும் பயன்பாட்டுச் சேவையை வழங்குபவர்களிடமிருந்து கட்டணங்களை அறவிடுதலும் அத்தகைய நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறு உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும் ;

(ஞ) அறிவித்தல்களை, பதாதைகளை, நிலைதாங்கிகளை அல்லது விளம்பரப் பலகைகளை வெளிக்காட்டி வைப்பதற்கு அல்லது வேறு ஏதேனும் வர்த்தக நோக்கத்திற்கு

அல்லது அத்தகைய நோக்கங்களுக்கு வீதி ஒதுக்கொன்றை, பகிரங்க வீதி ஒதுக் கொன்றை அல்லது தேசிய பெருவழி ஒதுக் கொன்றைப் பயன்படுத்துகின்ற எவரே னும் ஆளிடமிருந்து அல்லது ஏதேனும் நிறுவனத்திடமிருந்து கட்டணங்கள் அற விடுதலும் அத்தகைய நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறு ஒப்பந்தங்க ளைச் செய்துகொள்ளுதலும் ; அத்துடன்

(ட) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதன்மீது, நிறைவேற்றுவதன் மீது அல்லது புரிவதன்மீது இடைநேர் விளைவான அல்லது விளைவாந்தன்மை யதான அத்தகைய எல்லாச் செயல்களை யும் அல்லது விடயங்களையும் செய்தல்.

(2) ஏதேனும் அபிவிருத்தி இடப்பரப்பினுள் வீதித் திட்டமிடல் மற்றும் வீதி அபிவிருத்தி தொடர் பிலான ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தை அல்லது அபிவிருத்திப் பணியை நடைமுறைப்படுத்தும் போது (1) ஆம் உட்பிரிவில் அதன் தத்துவங்களை யும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கை யிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் விடயத்திற்கேற்ப தோதான அரசாங்கத் திணைக் களங்களுடனான, பகிரங்க கூட்டுத்தாபனங்களுட னான மாகாண சபையுடனான அல்லது உள்ளூ ரதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை அல்லது அபிவிருத்திப் பணியை நடைமுறைப்படுத்துவது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எந்த ஆள் அல்லது நிறுவனத்துக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் அல்லது நிறுவனம் அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைத் தொடங்கு முன்னர் அதிகாரசபையின் முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவில், "பொது முகாமையாளர்" என்னும் சொல்லமைப்பு காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "கொள்கை சார்ந்த விடயங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொள்கை மற்றும் செயல்நுணுக்கம் சார்ந்த விடயங்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"அதிகார சபையின் கடனெடுக்கும் தத்துவங்கள்.*

15. (1) அதிகாரசபை (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும் அமைச்சரின் எழுத்திலான சம்மதத்துடனும் இச்சட்டத்தின்கீழ் அதிகார சபை அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் அதன் கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு அதிகார சபை தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை -

(அ) தற்காலிக மேலதிகப்பற்று என்ற வகையில் அல்லது வேறு வகையில் ; அல்லது

(ஆ) தொகுதிக் கடன்களையும் முறிகளையும் வழங்குவதன்மூலம் அல்லது விற்பனையாளர் கடன் என்ற வகையில்,

கடனெடுக்கலாம் அல்லது திரட்டலாம்.

(2) அதிகாரசபையால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் திரட்டப்பட்ட ஏதேனும் கடன் அல்லது நிதியம் தொடர்பில் நிலுவையிலுள்ள கூட்டுமொத்தத்

தொகைகள் ஏதேனும் நேரத்தில் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகையை விஞ்சுதலாகாது.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*